செ.வெ.எண்: 96 நாள் : 11 .08.2022

# மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி, அவர்களின் இரங்கல் செய்தி.

**இன்று (11.8.2022) ஜம்மு காஷ்மீர், ரஜோரி மாவட்டத்தில், தீவிரவாதிகளுடன் ஏற்பட்ட மோதலில், தமிழகத்தைச் சேர்ந்த ராணுவ வீரர் திரு. லட்சுமணன் வீரமரணம் அடைந்தார் என்ற துயரச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைந்தேன். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினற்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்களையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். நாடு அன்னாரின் மிக உயர்ந்த தியாகத்திற்கு நன்றிக் கடன்பட்டுள்ளது.**

**இந்த மிகத் துயரமான நிகழ்வில், அவரை இழந்து வாடும் அன்னாரின் குடும்பத்தார்க்கு அதைத் தாங்கும் மன வலிமையைத் தரவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, அன்னாரின் ஆன்மா சாந்தியடைய வேண்டுகிறேன்.**

---

ஆளுநர்மாளிகை, சென்னை-22 ஒம்/-

11.08.2022 இணை இயக்குனர்(ம.தொ )